ஏற்றம் காரணமாக டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாகி தக்காளி 2 ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது, கத்திரிக்காய் 1 ரூபாய் 80 காசுக்குத்தான் கிடைக்கிறதே தவிர அதற்குக் குறைவாக இல்லை. எனவே அது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்தப் புள்ளி விவரங்கள் பல இடங்களில் சென்று விசாரித்து நவம்பர் 23-ம் தேதி வரை உள்ள விலைகள் ஆகும். நாங்கள் புள்ளி விவரம் சேகரித்த இடங்களில் நீங்களும் சென்று விசாரித்தால் நிச்சயமாக அந்த விலைக்குக் கிடைக்கும். இந்தப் புள்ளி விவரங்கள் சரியானவை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.